பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 13 ஞாயிற்றுக்கிழமை (29-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 230

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

### புலிகளின் ஊடுருவல் அச்சம்

# யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் நேற்று பெரும் எடுப்பில் தேடுதல்

## மக்களுக்கு பெரும் அசௌகரியம்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாண மையத்தை அண்மிய பகுதியில் விடுதலைப்புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை பெரும் எண்ணிக்கையிலான இராணுவததினர் குவிக்கப்பட்டு யாழ் நகரை அண்மித்த பகுதிகளில பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மற்றும் விமான நிலையம் புலிகளினால் தாக்கப்பட்டதையடுத்து முன் எச்சரிக்கையாக இந்த அதிரடி தேடுதல் வேட்டை நடத்தப்பட்டுள்ளது.

இராணுவததினரின் இந்த நடவடிக்கைகளினால் அதிகாலைவேலையாழ்போதனா வைத்தியசாலை கிளினிக்குகளுககுச் சென்ற நோயாளர் நலலூர்ச்சந்தசாமி கோவிலுககுச் சென்ற நூற்றுக்கணக்கான பக்தர்கள், அரச மற்றும தனியார் ஊழியர்கள் வர்த்தகர்கள் பெரும சிரமங்களுக்குள்ளானார்கள்.

யாழ் நகரை அண்டிய திருநெலவேலி, ஆடியபாதப் வீதி, பலகலைக்கழக வீதிகள, அதன் சுற்று புறம், நீராவியடி, பிறவுணவீதி, யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை அண்டியபகுதிகள், கொக்குவில், பிரம்படி, தலையாழி மற்றும் கந்தர்மடம் ஆகிய இடங்கள் சுற்றிவளைக்கப் பட்டன

8 ஆம் பக்கம் பார்க்க

## கலாநிதி நீலனுக்கு சர்வதேச விருது

(வொஷிங்டன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரும சட்ட வல்லுனருமான காலஞ்சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வத்திற்கு அமெரிக்க சர்வதேச சட்டம் மற்றும் சமூகஅமைப்பினால் முதலாவதுசர்வதேச விருதுவழங்கப்படவுள்ளது.

கலாநிதி நீலன் திருச்செல்வம் அறிவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்பை கருத்தில் கொண்டே இவ் விருது சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின்குடாவெலிரிலில் நடைபெற்ற மேற்படி அமைப்பின் கூட்டத்தில் 53 நாடுகளைச் சேர்ந்த 1200 கல்விமான்கள் கலந்து கொண்டனர். (ந-5)

## விமானங்களை திருத்த பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த நிபுணர்கள் வருகை

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து அங்கு தரித்து நின்ற பயணிகள் விமானங்களும் சேதத்திற்கு உள்ளாகின;

சேதத்திற்குள்ளான இந்த விமானங்களைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்துவதற்கு பிரான்சில் உள்ள எயர் பஸ் கம்பனியின் பிரதி நிதிகள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

இதுதொடர்பாகஸ்ரீ

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - ஜே.வி.பி 31 ந் திகதி சந்திப்பு

(கொழுபபு)

புதிய அரசியல யாப்பு மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக, மக்கள விடுதலை முன்னணி (ஜே வி.பி) யினர் எதிர்வரும் 31ந் திகதி ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்கவுள்ளனர்.

இச் சநதிபபை கட்சியின் செயலாளர் விமல் வீரவன்ச உறுதிப்படுத்தினார்

இதேவேலை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அடுத்த மாதம் 8ந் திகதி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளனர்; (ந)

## சுவிஸில் பொங்குதமிழ்

[லண்டன்]

சுவிஸ் நாட்டில் நேற்றுப் பொங்குதமிழ் எழிச்சி நிகழ்வு அனுஷ்டிக்கபபட்டுள்ளது இந் நிகழ்வில் ஐயாயிரத்துக்குமேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

சுவிஸ் நேரப்படி அதிகாலை 4 மணியளவில் அகவணக்கத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில் பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடனம்மற்றும கலைநிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் தமிழக பாடகர் புஷ்பவனம் குப்புசாமியின் எழிச்சி இசை நிகழ்வும் இடம் பெற்றது.

இதேவேளைஇன்று பிரான்ஸில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ம]

## படையினரின் செல்வீச்சு இருவர் பலி;8 பேர் காயம்

### வாழைச்சேனையில் சம்பவம்

(மட்டக்களப்பு]

வாழைச்சேனை கிண்ணியடிப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொணட எறிகணைத் தாக்குதலில் 10 வயது சிறுவன் உடபட இருவர் கொல்லபபட்டுளளனர். 4சிறுவர்கள் உட்பட 8பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில அனுமதிக்கப்படடுளளனர்

நேற்றுக் காலல இடம் பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களபபு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்ததினால் 5வீடுகள் சேதமடைந்தது; [ந]

## எதிரணியினர் போராடினாலும் செப்.7க்கு முன் பாராளுமன்று கூடாது

### அமைச்சர் டி எம். ஜெயரத்தினா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கூறிவருகின்ற போதும் உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அமைச்சரும், பொதுஜன ஐக்கியமுன்னணியின் செயலாளருமான டி எம். ஜெயரத்தினா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் எம.பிக்கள சிலர் அரசின் பக்கம் வரவுள்ளனரேயொழிய ஆளுங்கட்சி எம். பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது ஏனைய எதிர்க்கட்சிகளுக்கோ போகமாட்டார்கள.

ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே அறிவித்ததற்கமைய செப்ரெம்பர் 7ம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும். எதிரணியினர் எத்தகைய போராட்டம் நடத்தினாலும், பாராளுமன்றத்தை அரசு ஒரு போது கூட்டமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## ஜனாதிபதியின் அழைப்பால் ஐ. தே. கட்சிக்குள் சர்ச்சை

(கொழும்பு)

நாட்டில்தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு கட்சிக்குள் பலத்தசர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு அதிகாரமற்ற ஒருவரை அனுப்பிவைத்தமைதொடர்பாகவே கட்சிக்குள் பலத்த சர்ச்சை எழுந்துள்ளது.

நாடு அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் அழைப்புக்கு கட்சியின் முக்கியஸ்தர்களை அனுப்பிவைக்காததால் கட்சியின் கீழ் மட்ட அங்கத்தவர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் கட்சி

(8ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலசட்டத்தை எதிர்ப்போர் துரோகிகள்

### பிரதமர் ஆவேசம்

(கொழும்பு)

அவசரகால சடடத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள அனைவரும் எமது நாட்டின் தேசத்துரோகிகளே

இவ்வாறு வியாழனன்று அனுராதபுரத்தில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுபபு தொடர்பானகூட்டமொன்றில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் ஊர்வலத்தில் சட்டப்படியே பொலிஸார் நடந்து கொண்டனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது கலகத்தை தடுக்கும் வகையில் அவர்கள் நடந்து கொண்டமையினாலேயே பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததாக பிரதிப் பொலிஸ்மா அதி

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மாணவர்க்கு தளராத உறுதியுடன் கல்விப் பணியாற்றும் கல்வியியற் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் அமைய ஆவன செய்வோம்

## குகேந்திரன் எம்.பி. உறுதிமொழி

(அச்சுவேலி)

பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் தளராத உறுதியுடன் தமிழ் மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றி வரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மிக விரைவில் அதன் சொந்தக் காணியில் புதிய கட்டடத்தை அமைக்க ஆவன செய்வோம்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்; ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் உறுதி அளித்துள்ளார்.

கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெற்றஇவ் விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

பன்னெடுங் காலமாக கல்வியிலே தனக்கென ஓர் மகத்தான தனியிடத்தைக் கொண்டிருந்த யாழ்ப்பாணக் கல்விச் சமூகம், முன்னைய காலங்களிலே வியக்கத்தகு காரியங்கள் பலவற்றை செய்திருக்கின்றது.

ஆனால் இந் நிலை இன்று படிப்படியாக வீழ்ச்சி கண்டு வருவதை இன்றைய கல்விப் பெறுபேறுகளின் மூலமாக தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதையிட்டு நாம் மிகவும் வருத்தமடைகிறோம்.

தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக வீழ்ச்சி கண்டிருக்கும் நமது கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் பழைய நிலைக்கு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில நாம் தளராத உறுதியுடன் இருக்கிறோம்.

இதற்காக எத்தகைய உதவிகளையும் மாணவர்களுக்கு நாம நல்க வேண்டும் என்பதையே மக்கள் சமூகமும் நம்மிடமிருந்து எதிர் பார்க்கின்றது.

இந்த வகையில், யாழ்ப்பாண மண்ணில தனக்கென ஒரு சொந்தக் கட்டடமின்றி செயலாற்றி வரும் கல்வியியற் கல்லூரியின் கல்விப் பணி அனைவரையும் வியக்கவைக்கிறது. அதன் பணி மேலும் இடையூறின்றி தொடருவதற்கு அதற்கான சொந்தக் கட்டடத்தை அமைத்துக் கொடுக்க வேண்டியது எமக்குரிய பணியாகும என்றார்.

மேற்படி நிகழ்வில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திரு கமலநாதன் தனது தலைமையுரையில்;

எதிர்காலத்தில் குடாநாட்டின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் எமது கல்லூரி உருவாக்கப்பட்டு இரண்டாவது ஆண்டை எட்டி நிற்கின்றது.

இங்கு கல்வி பயின்று வரும் ஆசிரிய மாணவர்கள எதிர்காலத்தில் கல்விச்சேவைக்காக தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் செயலாற்றுவார்கள் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

இந்த நம்பிக்கையை மேலும வலுவூட்டுவதற்கு எமது கல்லூரியின் வளங்களை மேம்படுத்த வேண்டும் அதற்கு அனைவரது உதவியினையும் நாம் வேண்டி நிற்கிறோம் என்றார்.

(உ-14)

## இடமாற்றம்

(கல்வயல்)

திருகோணமலையில் 1990 ஆம்ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுக் கல்லூரி தற்போது வவுனியாவில் அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

9 54 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்திலேயே புதிய கூட்டுறவுக் கல்லூரி அண்மையில் மாகாணசபையின் தலைமைச் செயலாளரால் திறந்து வைக்கப்பட்டது.

மிகுதிக் கட்டடம் தொடர்ந்து கட்டப்படவுள்ளது.

இக் கல்லூரிக் கட்டடத்திற்கான மொத்த மதிப்பீடு 70 மில்லியன் ரூபாவாகும்.

(உ-111)

## வடமராட்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அமைச்சருடன் சந்திப்பு

### நிதி வழங்க இணக்கம்

(துன்னாலை)

வடமராட்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இடம்பெற்றது.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் ஆலயங்கள் குளங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் முன்னேற்ற அபிவிருத்திக் கழகங்கள் என்பவற்றின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு,

இவற்றை புனரமைப்பதற்கு வேண்டிய நிதியை காசோலையாக விரைவில் கட்டம் கட்டமாக வழங்குவதென கலந்துரையாடலில் அமைச்சர் உறுதியளித்தார். (உ-41)

## கூட்டுறவாளர் தினமும் பணியாளர் கௌரவிப்பும்

[மந்திகை]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கம் நடத்தும் 79வது அனைத்துலக கூட்டுறவாளர் தினமும் பணியாளர் கௌரவிப்பும் இன்று மு. ப 10 மணிக்கு காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ் மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் பிரதம விருந்தினராகவும்,

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, சங்கத்தின் மகளிர் குழுத்தலைவி பண்டிதை வ. பத்தினிப்பிள்ளை கலாசார கூட்டுறவு பெருமன்றத் தலைவர் மனைவன் முகந்தபபு ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும்,

முன்னாள் சங்கத் தலைவர் ச. செல்வந்திநாதன், பிரஜைகள் குழுத்தலைவர் சி வீரசிங்கம முன்னாள உப தலைவர் செ. சதானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-23)


### ஒத்திவைக்கப்பட்டுள்ளது

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் இன்று [29-07-2001] அதிர்ஷ்டம்பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர் வரும 29-08-2001ம் திகதி புதன் கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்

(இ/2331)



திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

### கலை நிலா அரங்கு

(மாதாந்த அரங்க நிகழ்வு)

காலம்: 29-07-2001 ஞாயிற்றுக்கிழமை (இன்று)

நேரம்: மாலை 6.15 மணி

இடம்: மறை அரங்கு

நிகழ்ச்சிகள்

★ நடனங்கள் ★ வசந்தன் ஆட்டம்

★ வாய்ப்பாட்டு ★ வாத்திய இசை நிகழ்வு

சிறப்பு நிகழ்ச்சி

### விடுதலைக் குமுறல்

(நாடகம்)

பிரவேசம்: இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலா மன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2393

[சி/2330]


## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

199653 ஏ

### கோப்பாய்

| | |
|---|---|
| 181000 ஏ | 181000 பி |
| 181000 சி | 18 000 டி |
| 181000 ஈ | 181000எப |
| 186591 ஏ | 186591 பி |
| 187871 ஏ | 190340 ஏ |
| 190340 பி | 190357 ஏ |
| 190357 பி | 191380 ஏ |
| 191380 பி | 191380 சி |
| 191419 ஏ | 191419 பி |
| 191741 ஏ | 191741 பி |
| 191741 சி | 191741 டி |
| 19 742 ஏ | 191742 பி |
| 191742 சி | 192914 ஏ |
| 192914 பி | 192981 ஏ |
| 195616 ஏ | 195616 பி |
| 195616 சி | 195656 ஏ |
| 195656 பி | 195792 ஏ |
| 195792 பி | 196281 ஏ |
| 196281 பி | 196308 ஏ |
| 196308 பி | 196308 சி |
| 196308 டி | 196308 ஈ |
| 196387 ஏ | 196387 பி |
| 196397 ஏ | 197711 ஏ |
| 197712 ஏ | 197712 பி |
| 197720 ஏ | 197730 ஏ |
| 197730 பி | 197731 ஏ |
| 197731 பி | 197736 ஏ |
| 197736 பி | 197780 ஏ |
| 197785 ஏ | 197785 பி |
| 197790 ஏ | 197829 ஏ |
| 197829 பி | 197829 சி |
| 197829 டி | 197829 ஈ |
| 197829எப் | 197837 ஏ |
| 197837 பி | 197850 ஏ |
| 197850 பி | 197850 சி |
| 198980 ஏ | 198980 பி |
| 198991 ஏ | 199108 ஏ |
| 199108 பி | 199108 சி |
| 199110 ஏ | 199110 பி |
| 199142 ஏ | 199143 ஏ |
| 199144 ஏ | 199144 பி |
| 199145 ஏ | 199 46 ஏ |
| 199146 பி | 199147 ஏ |
| 199147 பி | 199147 இ |
| 199151 ஏ | 199152 ஏ |
| 199152 பி | 199157 ஏ |

| | |
|---|---|
| 199157 பி | 199160 ஏ |
| 199160 பி | 199160 சி |
| 199160 டி | 199160 ஈ |
| 199166 ஏ | 199166 ஏ |
| 199166 சி | 199 66 டி |
| 199165 ஈ | 199166எப் |
| 199186 ஏ | 199193 ஏ |
| 199218 ஏ | 199222 ஏ |
| 199222 பி | 199223 ஏ |
| 199223 பி | 199224 ஏ |
| 199225 ஏ | 199229 ஏ |
| 199229 பி | 199233 ஏ |
| 199233 பி | 199234 ஏ |
| 196243 ஏ | 199249 ஏ |
| 199249 பி | 199249 சி |
| 200313 ஏ | 200313 பி |
| 200313 சி | 200314 ஏ |
| 200314 பி | 200320 ஏ |
| 200326 ஏ | 200333 ஏ |
| 200333 பி | 200333 சி |
| 200333 டி | 200333 ஈ |
| 200333எப் | 200336 ஏ |
| 200336 பி | 200336 சி |
| 200340 ஏ | 200345 ஏ |
| 200345 பி | 200350 ஏ |
| 200350 பி | |

## வி. உபகரணம் கையளிப்பு

(கோப்பாய்)

வலி கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படுமென்று, பிரதேச சபைத்தலைவர் பூ குணசிங்கம் தெரிவித்துள்ளார்

பிரதேச சபையின் நீர்வேலி தலைமைக் காரியாலயத்தில பி.ப 3.00 மணிக்கு விளையாட்டு உபகரணங்கள வழங்கப்படவுள்ளதால், விளையாட்டு கழகத் தலைவர் செயலாளர்களை சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-1)

## எரிகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு தவறுதலாக தட்டுண்டு தீப்பிடித்ததில் எரிகாயங்களுக்கு உள்ளான ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை வேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ் போதனா வைத்தியசாலை இயன் மருத்துவப பிரிவுப் பொறுப்பதிகாரி நா.செல்லையா என்பவரே எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

இச்சம்பவத்தில் ஒரு தொகைப்பணம மற்றும்பெறுமதியான ஆடைகளும தீக்கிரையானமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## வடமராட்சிப் பகுதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள்மழையினால்சிரமம்

(துன்னாலை)

இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள அண்மையில பெய்த கடும் மழையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்படி முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களின் கூரைகள சேதமாகியும சுவர்கள் பலமிழந்தும இருப்பதாகவும்,

அண்மையில பெய்த மழையினால் இக் குடியிருப்புகள சீவிக்க முடியாத அளவுக்கு சீரற்று இருப்பதாகவும,

இந்த நிலை தொடருமானால் எதிர்வரும் மாரி காலத்தில் இன்னோர் இடப்பெயர்வுக்குத்தாம் தயாராக வேண்டி ஏற்படலாம்எனவும் பாதிக்கப்பட்ட மக்கள தெரிவித்தனர். [உ-41]

## ஒழுக்க கலந்துரையாடல்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களுக்கான கல்வி, ஒழுக்கம் சமபந்தமான கலந்துரையாடல் ஒன்று கல்லூரி அதிபர் எம் ஸ்ரீபதி தலைமையில் இன்று மு.ப 10 00 மணிக்கு கலலூரி மண்டபத்தில் நடைபெறவுளளது.

இக்கல்லூரியில் தரம் 13ல் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தவறாது சமுகமளிக்கும்படி அதிபர் அறிவித்துள்ளார்.

[உ-58]

### தீவக வலயமட்ட

# சமூகக்கல்வி ஆக்கப் போட்டி

# பொது அறிவுமுடிவுகள்வெளியாகின

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் கடந்த மாதம் 20 ஆம் திகதி கோட்ட மட்ட சமூகக்கல்விப் போட்டிகள் நடைபெற்றன.

அவற்றின் முடிவுகள் கோட்ட ரீதியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாண வர்கள் பெயர் பாடசாலை ஆகியனவும்,

ஆக்கப்போட்டி முடிவுகள் முதல் மூன்று இடங்களும் தரப்படுகின்றன.

**வேலணைக் கோட்டம் பொது அறிவு**

**தரம் 12-13**

மு: கோமேஸ் நயினாதீவு மகா வித்தி, செ. ஸ்ரீதரன் வேலணை சேர் வை துரைச் சுவமி ம ம வித்தி, அ. அருளினி நயினாதீவு மகா வித்தி, பொ: ஜெயராஜ் நயினாதீவு மகா விதுதி, கி. ஜெயந்தி மாலா வேலணை சேர் வை. துரைச்சுவாமி ம.ம, வித்தி.

**தரம் 10 11**

உ. கௌரிசங்கர் நயினா தீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட விதுதி, வி அரவிந்கன் நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்து, ந. சுப லோசன் அல்லைப்பிட்டி பரா சக்தி வித்தி, இ கோகுல தாசன் வேலணை சேர் வை துரைச்சுவாமி ம ம வித்கி. ப. குகப்பிரியா நயினாதீவு மகா வித்தி.

**தரம் 8 9**

தே சர்மிலன் வேலணை சைவப்பிரகாச வித்தி. க.பகீ ரதி நயினாதீவு மகா வித்கி. மு அபூஜிகாந் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ் விதுதி. பே. ராஜ்தமார் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட விதுதி. பே. கார்த்திகா நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி,

**தரம் 6-7**

கு. கவிதா வேலணை மேற்கு நடராசா வித்தி, இ யுகேந்திரன் வேலணை சேர் வை. துரைச்சுவாமி ம.ம. வித்தி, சு சஜனி சர வணை நாகேஸ்வரி வித்தி, யோ தர்ஸன் வேலணை கிழக்கு மகா வித்தி, ஞா. கிறிஸ்ரி யுவராஜ் புங்குடுதீவு மகா வித்தி.

**ஆக்கக் கண்காட்சி**

**1) செயற்திட்டம் ஆய்வுக் குறிப்புகள்**

வேலணை மேற்கு நடராசா வித்தி, வேலணை சேர் வை துரைச்சுவாமி ம:ம: வித்தி

**2) சித்திரம் ஓவியம்/ நிலவரைபடம்/புகைப்படம்**

வேலணை சைவப்பிரகாச வித்தி. புங்குடுதீவு ஸ்ரீசுப்பிர மணிய மகளிர் வித்தி, வேலணை சேர் வை: துரைச் சுவாமி ம ம வித்தி.

**3) செதுக்கு வேலை/ மாதிரி உருக்கள்**

வேலணை மேற்கு நடராசா வித்தி, வேலணை சேர் வை துரைச்சுவாமி ம.ம வித்தி, புங்குடுதீவு மகா வித்தி.

**4) வரலாற்றுக் குறிப்புகள்:**

வேலணை சைவபபிரகாச வித்தி. புங்குடுதீவு ஸ்ரீசுப்பிர மணிய மகளிர் மகா வித்தி. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.

**5) புதிய தொழில்நுட்ப ஆக்கங்கள்:**

நயினாதீவு மகா வித்தி, வேலணைசேர். வை துரைச் சாமி ம. ம வித்தி.வேலணை மேற்கு நடராசா வித்தி,

**ஊர்காவற்றுறைக் கோட்டம் பொது அறிவு**

**தரம் 12- 13**

ப உஷா யாழ்ற்றன் கல் லூரி, பே. கேமலதா கலாநிதி ஆ தியாகராசா ம ம வித்தி, ந. கிருபா கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தி, தே தீபன் யாழ்ற்றன் கல் லூரி. க. சங்கீதா கலா நிதி ஆ தியாகராசா ம.ம. வித்தி.

**தரம் 10- 11**

செ. அசோக்குமார் நாரந் தனை றோ. க. ம வித்தி. க சூரியகலா கலா நிதி ஆ. தியாகராசா ம ம வித்தி. த. அசோக்குமார் கலாநிதி சு. தனலோசனா கலாநிதி ஆ தியாகராசா ம ம வித்தி மு காயினி நாரந்தனை கணேசா மகா வித்தி.

**தரம் 8- 9**

ம சோபியா காரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தி.யே. ரஜனிகா யாழ்ற் றன் கல்லூரி.தி பவிதா கலா நிதி ஆ தியாகராசா ம ம வித்தி கோ. கருணாகரஸ் நாரந்தனை கணேசா வித்தி, ம தர்ஷன் தம்பாட்டி அ த. க. பாடசாலை.

**தரம் 6- 7**

க. சேயோன் அனலைதீவு சதாசிவமகா வித்தி,தி.யோக நாயகி காரை சுந்தரமூர்த்தி வித்தி, ப. கபிலேஸ்வரன் புனித அந்தோனியார் கல்லூரி, உ. சாளினி நாரந் தனை கணேசா மகா வித்தி, சு. றொசானாபுனிதமரியாள் பெண்கள் பாடசாலை;

**ஆக்கக் கண்காட்சி**

**1) செயற்றிட்டம் ஆய்வுக் குறிப்புகள்**

அனலைதீவு சதாசிவ மகா வித்தி, யாழ்ற்றன் கல்லூரி, நாரந்தனை கணேசா மகா வித்தி

**சித்திரம்/ ஓவியம்/ நில வரைப்படம்/புகைப்படம்**

புனித அந்தோனியார் கல் லூரி, யாழ்ற்றன் கல்லூரி, நரந்தனை கணேசா மகா வித்தி

**3) செதுக்கு வேலை/மாதிரி உருக்கள்**

நாரந்தனை றோ. க. மகா வித்தி. புனிதமரியாள் பெண் கள் பாடசாலை, யாழ்ற்றன் கல்லூரி

**4) வரலாற்றுக் குறிப்புக்கள்**

கரம்பொன சிறியபுஸ்ப மகளிர் மகா வித்தி.

**நெடுந்தீவுக் கோட்டம் பொது அறிவு**

**தரம 12 13**

ந. மனோகரன் நெடுந்தீவு மகா விதுதி. ச தேவஜெ னோவா நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி. இ அனற் சியா நெடுநதீவு றோ க. மகளிர் கல்லூரி, பி. ஒஸ்ரின் வக்ஸலா நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி, இ: இனேந் திரன் நெடுநதீவு மகா வித்தி.

**தரம் 10-11**

அ. சரத்குமார் நெடுந்தீவு மகா விதுதி, வே சிவாகரன் நெடுந்தீவு மகா வித்தி, கோ: அனுதர்ஸன் நெடுந்தீவு சைவப்பிரகாச விதுதி, யோ. பிரதீபன் நெடுந்தீவு மகா வித்தி. சி. கஜேந்தினி நெடுந்தீவு றோ. க. மகளிர் கல்லூரி.

**தரம்8-9**

து அருள் ஜீவன் நெடுந்தீவு மகா வித்தி, ஜே. ஆனந் நெடுந்தீவு மகா வித்தி. ஞா. அமலஜனா நெடுந்தீவு மகா வித்தி, தி விஜயவேணி நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி, க. பகிரதன் நெடுந் தீவு சைவப்பிரகாச வித்தி

**தரம் 6-7**

இ.டனுஷா நெடுந்தீவுசைவப் பிரகாச வித்தி. அ. றெஜி தாஸ் நெடுந்தீவு சீககிரியாம பள்ளம்அ.த.க.பாட, தனஞ் செயன் நெடுத்தீவுமகாவிதது, அ. வானதி- நெடுந்தீவு றோ. க. மகளிர் கல்லூரி, வே. சுகி தரன்- நெடுந்தீவு மகாவித்தி, ந. டர்ஷிகா- நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தி

(உ-3)

(பாண்டியன் தாழ்வு புனி சந்தானாள் ஆலய திரு விழாவை ஒட்டியஇககவிதை)

## பேரின்பம் தருபவளே!

மாசில்லா தேவ தாயை
மணிலே தந்த தாயே
இயேசுவின் பேர்த்தியாக
இவ்வுலகில் உதித்தவளே
பேசிடும் வார்த்தை தனில்
பேரின்பம் தருபவளே
வீசிடும் தொன்றல் போல
விளங்கிடும் உன் அருளே
மாசில்லா வாழ்வினையே
மண்ணகத்தில் மலர்த்திடவா!

**சூரியநிலா**

## இஸ்ரேலுடனான உறவைக் கண்டித்து அம்பாறையில்ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இஸ்ரேலுடன் மீண்டும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதைக் கண்டித்து அரசாங்கத்திற்கு எதிராக நேற்று முன்தினம் அமபாறை பாலமுனை கிராமத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

ஜும்மா பள்ளிவாசல் தொழுகையின் பின் அங்கு திரண்டிருந்த முஸ்லீம் மக்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு ஆர்பபாட்டத்தில ஈடுபட்ட னர்.

மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணி பாலமுனைமாவட்ட வைத்தியசாலைவரை சென்று இஸ்ரேலின் தேசியக் கொடியை அங்கு வைத்து எரித்தது. (உ-5)

### மலசல கூடம்

## சேதம்

அண்மையில் திருத்தியமைக் கப்பட்ட மருதனார்மடம் சந்தையின் மலசல கூடத்தை பாவிக்க முடியாத வகையில் விஷமிகள்சிலர் சேதப்படுத்தி யுள்ளனர். (உ-129)

## நல்லூரான் திருவடிக்கு-5



## நல்லைப்பதியில் நானிருக்க!

நல்லைப் பதியிலே நானிருக்கச் செய்ததவ
எல்லை உனைவணங்கி ஏற்றுதற்கே-இல்லை
இதைவிடவும் பேறு எனக்குண்டோ உண்டோ
அதை நினைந்து ஆறுகிறேன் ஆள்

**நயினைச் சோதி**

## வந்திடுவாய் வினையறுக்க!

வேலெடுத்து வினையறுத்த
வெற்றி வேல் முருகா
சீர் பெற்று சிவனவர்க்கு
பொருள் உரைத்த முருகா
நான்முகனின் அகந்தையை
அழித்தவனே முருகா
தேவருக்கு விடுதலை
அளித்தவனே முருகா
தேவநாயகியை பரிசாய்
ஏற்றவனே முருகா
ஏற்றமுடன் உன்பாதம்
பற்றுகிறோம் முருகா
எம்மினத்தை காத்திடுவாய்
நல்லை நகர் முருகா.

**யாழ். பல்கலைக்கழகம் எஸ். பூரணி**

## 'நல்லூரா நின்னருளை நல்கு'

உதிரமதை வியர்வையாக்கி உழைத்துவாழும்
நிலையகன்று
மதியற்று மாற்றான் பொருள்பறித்து-நிதமிங்கு
வல்லோர் கொடுமையினால் வாடுவோர் துயரகல
நல்லூரா நின்னருளை நல்கு

**செ. சுதாகரன்**

## 'இன்புற நீயும் வந்தருள்வாய்'

எங்கும் நிறைந்த வடிவழகே
நல்லைப் பதியுறை வேலவனே
திங்கள் அணிசடை சிவமகனே
சிந்தை நிறைந்திடும் பேருருவே
தங்கத் தமிழினை ஆய்ந்தவனே
தெய்வானை வளளியின் மாபதியே
இங்குளார் இன்னல் களைந்திடவே
இன்புற நீயும் வந்தருள்வாய்!

**சி. சிவதாசன்**

## நல்லூரானே காத்து நில்!

ஊன் உருக உள்ளத்தினுளிருத்தி நின்
திருவடியை தரிசிப்பார்கு குறையில்லை
வான் பொய்யா வரமளித்து வளம் கொழித்த
பொன்னாளின்றிலலல ஏக்கமுடன்
தேன் சுவைக்கும வண்டாய் தேடி அலைந்தும்
வாழும் நிம்மதி துளியுமில்லை
நான் மறையும நானிலமும போற்றும் முருகா
கோழிக் கொடியும் மயிலுமிருகக
தொன்மையினம் தேய்ந்தழிவதும் முறையோ
ஓராறு முகமும் ஈராறு விழியும
பன்னிரு கரமும் படைதுரத்தும வேலும்
பாராளவதை நாமறிவோமையா
நன்றே செய்வாய் நாடுய்ய வந்துற்ற
பகை முடிப்பாய் பீடித்த இடரை
இன்றே களைவாய் இதயம் நொந்தேங்கும்
குலத்தை நல்லூரானே காத்து நில்!

**கந்த தியாகராசா**

## நல்லூரா எமை காப்பாய்!

அன்பர் துயர் போக்கிடுவான்
ஆறுமுகன் குகன்
இருகையும் கூப்புவார்க்கு
ஈடிலா பேரருள் புரிவான்
உயர்ந்தோர்கும் தாழ்ந்தோர்க்கும்
ஊரிலுள்ள நலலோர்கும்
என்றும் துணையிருப்பான்
ஏத்திடுவோர் மனத்தினிலே.
ஐங்கரனார் தம்பியே
ஒப்பிலாமாமணியே
ஓம்புவார் உள்ளிருப்பாய்
ஔவைக்குப் புத்திசொன்ன
அலங்கார நல்லூரா
அல்லல் தீர்த்து எம்மை
அகிலத்தில் வாழவைப்பாய்.

**தீ. மயூரகிரி**

# செய்தித் துளிகள்

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பாண்டியன் தாழ்வு அன்னம்மாள் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 7.00 மணிக்கு அ.ம.தி வடமாகாண முதல்வர் அருட்திரு ஜீவாப்போல் தலைமையில் திருநாள் திருப்பலியும் திருச்சொரூப ஆசிரும் இடம்பெறவுள்ளன. (செ-6)

## பொது அறிவு புதிர்ப் போட்டி

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான கணிதவிஞ்ஞான பொது அறிவு புதிர்ப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (உ-23)

## விஷ ஜந்துக்களால் பாதிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் விஷ ஜந்துக்களினால் கடியுண்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோர் தொகை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

கடந்த நான்கு தினங்களில் மாத்திரம் 10 ற்கு அதிகமானவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

## சந்தை புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள ''கற்கோவளம் பொதுச் சந்தை'' 10 இலட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரனின் கோரிக்கையை யடுத்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கற்கோவளம் பொதுச் சந்தையில் மீன் சந்தையும், மரக்கறிச் சந்தையும் உள்ளடங்க இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-52)

## மேலும் ஒருவர் கைதானார்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் விமான நிலையங்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக விமானப் படையைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சி ஐ டியினர் பலமுனைகளில மேற்கொண்டுவரும் விசாரணைகளையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட விமானப் படையைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் புலிகளுடன் தொடர்புகள் இருந்தனவா என்பது பற்றிய விசாரணைகள் நடந்துவருகின்றன. (ந-8)

## பணிமனையை இடம் மாற்ற இணக்கம்

(வண்ணார்பண்ணை)

வேலணைப் பிரதேசத்துக்கான கடற்றொழில நீரியல் வளத்துறைத் திணைக்கள பணிமனை உடனடியாக வேலணை வங்களாவடி சந்தியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் மீனவர்களின செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இப் பணிமனையின் இடமாற்றம் அவசியம் எனவும் மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராம சேவகர்கள் வைத்த ஆலோசனையை ஏக மனதாக வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு ஏற்றுக்கொண்டது. (உ-109)

## சாகித்திய விழா

(ஏழாலை)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிரதேச சாகித்திய விழாவை யொட்டி போட்டிகள் நடைபெறவுள்ளன.

கவிதை, சிறுகதை, நாடகம், இசை, கிராமிய நடனம ஆகிய போட்டிகள் மாணவர்களுக்கும் மற்றையவர்களுக்கும பொதுவானதாக இடம பெறவுள்ளன.

சமூக மேம்பாட்டையும் சமாதானத்தையும் வலியுறுத்துவதாகவும் அரசியற் கலப்பு அற்றவையாகவும்படைப்புகள் அமைதல் வேண்டும்.

இதற்கான விண்ணப்ப இறுதித் தினம் வருமமாதம் 5 ஆம திகதியாகும். (உ-12)

## நற்செய்தி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் வருடாந்த நற்செய்திப் பெருவிழா எதிர்வரும2, 3, 4, ஆம திகதிகளில் பி.ப. 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பேராயர் குலேந்திரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## பொதுக் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், கடந்த 21 ஆம் திகதி கல்லூரி நினைவு மண்டபத்தில், சங்கத் தலைவர் ந சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது. (இ)

## இருசடலங்களும் அரசசெலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் ஈவினைப்பகுதியில் அண்மையில் கிரனைற்றை வெடிக்க வைத்து உயிரிழந்த இரு இளைஞர்களின்சடலங்களும நேற்று முன்தினம் அரசசெலவில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்விரு இளைஞர்களின் சடலங்களும் அடையாளம காணும்பொருட்டு பொலிஸாரால் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதுவரைசடலங்களை எவரும உரிமைகோராததால் யாழ் நீதவானின் உத்தரவிற்கு அமையசடலங்கள் அடக்கம செய்யப்பட்டன. (இ-10,43)

# இவ்வருட க.பொ.த (உ-த) பரீட்சையில் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 541 பரீட்சார்த்திகள் தோற்றுவர்

(கொழும்பு)

அடுத்தமாதம ஆரம்பமாக உள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடு முழுவதிலும் இருந்து ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 541 பேர் தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆர் பி. அமரக்கோன் அறிவித்துள்ளார்.

இம் முறை நடைபெறவுள்ள உயர் தரப் பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகள், மூன்று பாடம் எடுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நான்கு பாடம் எடுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்னும் மூன்று வகையான பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாகவும்,

இதில் 4 ஆயிரத்து 20 பேர் 3 பாடம் எடுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எனவும், 34 ஆயிரத்து 64 பேர் நான்கு பாடம் எடுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எனவும் பரீட்சை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை வடகிழக்கில் உள்ள 253 பரீட்சை நிலையங்கள் உள்ளடங்கலாக நாடுமுழுவதும் ஆயிரத்து 554 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜனவாக்கெடுப்பின் காரணமாக இப்பரீட்சை இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளதும், ஒகஸ்ட் 4 தொடக்கம் 17 வரை முதலாம் பிரிவும் ஒகஸ்ட் 27 தொடக்கம் செப்ரெம்பர் 6 வரை இரண்டாவது பிரிவுமாக பரீட்சை நடைபெறவுள்ளது. (உ-9)

## இராசி பலன்

29/7/2001
(ஆடி 13 ஞாயிறு)
நவமி மு.ப 7.49 வரை
விசாகம் பி.ப 2.03 வரை
ராகு காலம் 4.33-6.03
நல்லநேரம் 9.03-10.33

### மேடம்

நண்பர்கள் மனஸ்தாபம், வியாதி, வீண்தொல்லை, காரியதடங்கல்.

### இடபம்

திடீர் பயணம், சினேகிதர் சந்திப்பு, செல்வாக்கு, காரியம் கைகூடும்.

### மிதுனம்

காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி, விவாகம் திருமணம் கைகூடுதல், இலட்சுமீகரம்.

### கடகம்

உஷ்ணரோகம் வியாபார மேன்மை, முயற்சி தாமதம், குடும்பக்கவலை.

### சிங்கம்

விரோதம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், தாய் வழி உறவு.

### கன்னி

நினைத்த காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, அந்நியர் சந்திப்பு.

### துலாம்

பொருள் விரயம், பெண்கள் உதவி, வாக்குக் கலகம், காரியதாமதம்.

### விருச்சிகம்

உடல்நலம், பெரியோர் மதிப்பு. நல்லஉணவு, நல்ல முயற்சி.

### தனுசு

சுபசெலவு, உணர்ச்சிவசப்படல், காரியதாமதம், நித்திரைக்குறைவு.

### மகரம்

குடும்பசுகம், தனலாபம், சென்ற இடத்தில் செல்வாக்கு முயற்சி நன்மை.

### கும்பம்

பணியாளர்உதவி, கடும் முயற்சி, உடல்வியாதி, முயற்சிகைகூடும்.

### மீனம்

புதிய திட்டம், பயந்தசுபாவம், காரிய தாமதம், பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்-

# பட்டினிக்கு எதிரான நிறுவன நிதி உதவியுடன் கும்பளைகுளம்புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பகுதியில் அமைந்துள்ள கும்பளை விவசாய குளம் புனரமைப்பு வேலைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன.

இப்பகுதி விவசாய சம்மேளத்தினால் அரசசார்பற்ற நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரின் நிதி ஒதுக்கீட்டில் இந்த விவசாய குளம புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல வருட காலமாக பாதிப்புகளுக்கு உள்ளாகி இருந்த இக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இம் மாத இறுதிப் பகுதிகளில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் குளத்தின் மூலம் விவசாயிகள் சிறுபோக உற்பத்தியினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)

# சர்வஜன வாக்கெடுப்பு பிரசாரக் களத்தில் வேல்முருகு தங்கராசா

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜனவாக்கெடுப்பு தொடர்பாக வடமாகாணத்தில் இடம்பெறவுள்ள தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா பொறுப்பான அதிகாரியாக ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட இணைச்செயலாளர் ரி தேவகுலநாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, வேல்முருகு தங்கராசா விரைவில் யாழ். வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் [உ-104]

# கட்டுப்பாட்டை மீறி சவுக்கு மரம் வெட்டியோர் படையினரால் கைது

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்களை வெட்டிய அறுவர் படையினரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களே படையினரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

மேற்படி பகுதியில் சவுக்கு மரங்களை வெட்டுவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (உ-23)


## எமது பாராட்டுகளும் வாழ்த்துகளும்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ. கூ. சங்க கலாசாரக்கூட்டுறவுப் பெருமன்றத்தின்செயலாளரும் கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளருமாகிய

சொல்வேந்தன்

திரு. ஆ. ரகுநாதன் B. A (Hons)

யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டமையினையிட்டு அன்னாரின் சேவைகள் சகலதுறைகளிலும் பரவி ஓங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அன்னாரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கட். நெல். ப. நோ. கூ. சங்கம்
கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்.

28.7.2001
கரவெட்டி.

(சி/2329)

## இன்று ஒரு தகவல்

# கருமியும் கண்ணாடியும்

பணக்காரன் ஒருவன் இருந்தான் ஆனால் அவன் கருமி அறிவுரை பெறுவதற்காக அவன் துறவி ஒருவரிடம் வந்தான் துறவியார் அவனைக் கண்ணாடி யன்னல் அருகே அழைத்துச் சென்றார். ''இது வழியாக வெளியே பார், என்ன நடக்கிறது சொல்'' என்றார். ''அங்கும், இங்கும் மக்கள் கூட்டம் கூட்டமாய்ச் சென்று கொண்டிருக்கிறார்கள்'' என்று சொன்னான் கருமி ''அப்படியா?'' என்ற துறவி முகம் பார்க்கும் கண்ணாடி அருகே அவனை அழைத்துச் சென்றார். ''இந்தக் கண்ணாடியில் பார் என்ன தெரிகிறது சொல்'' என்றார். ''என் உருவம் மட்டும் தான் தெரிகிறது'' என்றான் கருமி.

இரண்டும் கண்ணாடிதான்: ஒன்றின் வழியாகப் பிறர் உருவத்தைப் பார்க்க முடிந்தது. ''இன்னொன்றில் நம் உருவத்தைத்தான் பார்க்க முடிந்தது ஏன்?'' என்று கேட்டார் துறவி, கருமியால் பதில் சொல்ல முடியவில்லை துறவி சொன்னார் ''பிற பொருள்களைக் காட்டும் கண்ணாடியில் ஒரு பக்கத்தில் வெள்ளியைத்தடவி விட்டால் அது பார்க்கின்றவர் உருவத்தைத்தான் காட்டும். அது போல்சிறிதளவு பொருள் நம்மிடம் சேர்ந்து விட்டாலும், நாம் தன்னல முடையவர்கள் ஆகிவிடுவோம் புரிகிறதா?'' என்றார். இதைக் கேட்ட கருமி, ''நான் இனி மேல் பிறர்க்கும் பயன்படும் வகையில் என் செல்வத்தைச் செலவழிப்பேன்'' என்று கூறி விடைபெற்றான். □

பேராசிரியர் எ.சோதி

# இரவு 8-00 மணிக்குப் பின் தேர்தல் கூட்டங்களுக்கு தடை

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான பிரசாரக் கூட்டங்களுக்கு இரவு எட்டுமணி வரைக்கும் அனுமதி வழங்கப்படுமென வாக்கெடுப்பு தொடர்பான கண்காணிப்பு வேலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒ ஒ சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒ ஒ. சமரசிங்காவின் இந்த அறிவிப்பு நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு எட்டுமணிக்கு மேல் பிரசாரக் கூட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டாம எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான பிரசாரக் கூட்டங்கள ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இழப்புகளைக் கண்டு தளர்வடைய தேவையில்லை படையினர்க்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

புலிகளின் தாக்குதலில் பல விமானப்படை ஊர்திகள் அழிந்து விட்டாலும் கூட எத்தகைய மனத்தளர்ச்சியையும் படையினர் அடையத் தேவையில்லை என யாழ்ப்பாணத்திலுள்ள படையினருக்குகுடாநாட்டின்கட்டளை தளபதி மேஜர்ஜெனரல் சுசில் சந்திரபால அறிவுறுத்தியுள்ளார்.

புலிகளின் தாக்குதலால் பல யுத்தவிமானங்கள அழிக்கப்பட்டதை அடுத்துபடையினரின் மனோநிலை பாதிப்படையாமல் இருக்குமுகமாகவும படையினருக்குஉற்சாகம் அளிக்கும்முகமாகவுமயாழ் தளபதிபலாலியிலிருந்து ஒலிபரப்பாகும்சிங்கள சேவையில் உரையாற்றியுள்ளார். அத்தோடு குடாநாட்டின் பல முன்னரங்க நிலைகளுக்கு நேரடி விஜயம் செய்து படையினருக்கு உற்சாகம் அளித்தும் வருகிறார். (உ-8)

# முத்திரையிடப்பட்ட தபாலுறைகளுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

முத்திரை இடப்பட்ட தபாலுறைக்கு யாழ் குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இத் தபாலுறைகள்தபாலகங்களுக்கு அனுப்பப்படுகின்ற போதும சிலர் பெருந்தொகையாக அவற்றை கொள்வனவுசெய்வதாலேயே திடீர்த்தட்டுப்பாடுகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளைதற்போது1000 ரூபா 500 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கிருந்த தட்டுப்பாடு நீங்கியிருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-59)

# பரு. பிரதேச செயலக காணி கொள்வனவுக்கு 16 இலட்சம் அன்பளிப்பு

பருத்தித்துறை பிரதேச செயலகக காணிகொளவனவுக்கென 16 இலட்சம் ரூபாவைஅன்பளிப்பாககாணி கொள்வனவுக்குமுவிடம் பொதுமக்கள் வழங்கியுள்ளனர்.

சுமார் 14 இலட்சம் ரூபாவுக்குக் காணிகொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது காணியின் பாதுகாபபுச் சுவர் அமைககும் நடவடிக்கைகளும், காணியில் உளள கிணறுபுனரமைக்கும் நடவடிக்கைகளும மேற்கொளளப்பட்டுவருகின்றன.

இந்நடவடிக்கைகளை இளைப்பாறிய பிரதேச செயலர் எஸ். முருகேசம்பிள்ளை தலைமையிலான காணிக்கொள்வனவுக்குழு மேற்கொண்டு வருகின்றது. (உ-52)

# கப்புதூப் பகுதி மக்கள் விவசாய உள்ளீடுகள் பெறுவதில் சிரமம்

(துன்னாலை)

கரவெட்டி கப்புதூ விவசாய சம்மேளனத்திற்கு உட்பட்ட பகுதியில் தனியான கமநலசேவை நிலையத்தைத் திறந்து விவசாய உள்ளீடுகள் மற்றும் தேவையானபொருட்களை இலகுவில் பெற வழிவகை செய்ய வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் தமது கிராம அலுவலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதியில் 5 ஆயிரம் வரையான குடும்பங்கள் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் தமக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதாயின் பல கிலோமீற்றர் தூரம் சென்றே அவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந் நிலையினைத் தவிர்க்கும் வகையிலேயே மேற்படி கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். (உ-41)

# ஆவணங்களை அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குஉட்பட்டபதிவு செய்யப்பட்ட சனசமூகநிலையங்களின் கூட்ட அறிக்கை வங்கி பணவைப்பு புத்தகம், கணக்கறிக்கை, அங்கத்தவர் பட்டியல் ஆகியவற்றை இம்மாதம் 31,ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர் கே கமலசேகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி சனசமூகநிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடுதொடர்பாகவே மேற்படி ஆவணங்கள்கோரப்பட்டுள்ளன. (உ-6)

# மேலும் மூன்று மனு தாக்கல்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்குத்தடை உத்தரவு விதிக்குமாறு மேலும் மூன்று வழக்குகள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மக்கள்கட்சி மற்றும் கொள்கைகளுக்கான நிதியம் ஆகியவற்றுடன் மூன்று தனிநபர்களும் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்தமனுவில்தேர்தல்ஆணையாளரும் சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (வ)

# ரவூப்ஹக்கிம் வவுனியா விஜயம்

(வவுனியா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூ ஹக்கீம் இன்று வவுனியாவற்கு விஜயம்செய்யவுள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பின் போது முஸ்லிம் சமூகத்தின நிலைப்பாடு பற்றிவவுனியா வாழ் முஸ்லிம் மக்களின் கருத்துக்களை அறியவே ரவூப்ஹக்கீம் வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் ஏனையபாராளுமன்ற உறுப்பினர்கள் 6பேரும வருகிறார்கள் வவுனியா பட்டாணிச்சூர் முஸ்லிம் பள்ளிவாசலின் முன்றலில் இடம் பெறும் தொழுகையைத்தொடர்ந்து கருததரங்கு இடம் பெறும். (வ)

# வீரர், வீராங்கனைகள் திருமலை புறப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இருந்து தேசிய மட்டப் போட்டியில் பங்கு கொள்ளத் தெரிவான உதை பந்தாட்ட, வலைப்பந்தாட்டவீரர்வீராங்கனைகள் அடுத்த மாத முற்பகுதியில் திருமலை செல்லவுள்ளனர்.

திருமலை செல்லவுள்ளவர்களின் பெயர்கள் வருமாறு.

உதை பந்தாட்டம்: ஏ.றொனிமாஷல், எஸ். சபானந்தம்,

வலைப்பந்தாட்டம்: ரி காந்திமதி, எம். மாலினி, எஸ் சிவகௌரி எஸ் ருவாஜினி, பிரமைதிலி, ரி சங்கீதா. (உ-10)

# உறக்கத்தில் இருந்த கொடிகாம வாசிபானைக் கத்தியால் வெட்டுண்டார்

(மந்திகை)

உறக்கத்தில்இருந்தவேளை பாளைக்கத்தியால் வெட்டப்பட்டவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று கொடிகாமம் கச்சாய்வீதிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நாகன் ஐபாத்தம்பி[வயது36] என்பவரே படுகாயமடைந்தவராவார். [உ-23]

# அனுரா கொங் கொங் பயணம்

(கொழும்பு)

சபாநாயகர் அனுராபண்டாரநயக்கா வியாழன் மாலை கொங்கொங் நாட்டிற்குப் பயணமானார். தற்போதையஅரசியல்நெருக்கடிகளிலிருந்து விலகியிருக்குமுகமாகவே சபாநாயகரின் வெளிநாட்டுப்பயணம்அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள இன்மையால் நோயாளர் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (ம)

# மூதாட்டியின் கால் முறிவு

(மந்திகை)

இரவு நேரம் கிணற்றினுள் தவறி வீழ்ந்த மூதாட்டி 8 மணித்தியாலயங்களின் பின் மீட்கப்பட்டு வலது கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி மேற்கைச்சேர்ந்த யோவான் திரேசம்மா (வயது-80 என்பவரே கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (உ-23)

# உரும்பிராயில் வாள் வெட்டு

(உரும்பிராய்)

உரும்பிராய் பகுதியில் கடந்த வியாழன் இரவு இடம் பெற்ற கோஷ்டிமோதலில், நான்கு பேர் வாள் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி, யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் சிவகுல வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

உரும்பிராய் தெற்கில்உள்ள ஒரு சாராருக்கும் உரும்பிராய் வடக்கிலே மற்றொரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கோஷ்டி மோதலாகி வாள் வெட்டில் முடிவடைந்தது. (இ)

# பொலிஸ் நிலையத்தில் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்க

(யாழ்ப்பாணம)

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள, விசேட அடையாள அட்டைகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிதெரிவித்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை விபரம.

### தேசிய அடையாளஅட்டை

★சீவரத்தினம மணிபல்லவன 81/2 ஆஸ்பத்திரி வீதி கொட்டடி.

★ இராமலிங்கம் கருணாகரன் உடுவில் தெற்கு.

★ நவரட்ணம் ஆறுமுகசாமி 87 பிரான்பற்று சங்கானை வடக்கு.

★ குமரேசு பொன்னையா கனகலிங்கம்45 கொட்டடி யாழ்ப்பாணம்,

★ குட்டியன் பாலசிங்கம் 776, குட்செட் வீதி கோண்டாவில்.

★ சிற்றம்பலம் நல்லம்மா புலோலி வடகிழக்கு;

★ சிவஞானம் தனலக்சுமி 9/1 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்.

★ பொன்னையா கசிதா 8ஆம்யூனிற் தர்மபுரம்கிழக்கு

★ தர்மலிங்கம் ரவீந்திரன் 307 ஏசென்செபஸ்ரியர் வீதி கோண்டாவில்.

★ சரவணமுத்து கனகசபை மல்லாகம் வலிவடக்கு;

### விசேட அடையாள அட்டை

★ சுப்பிரமணியம் கனகராசா வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி

★ முத்துக்குமார் நடராசா பழைய கண்டி காரைநகர்.

★ விசுவநாதர் தணிகாசலம் சிவன் கோவிலடி. புத்தூர் மேற்கு;

★ சிற்றம்பலம் நல்லம்மா புலோலி வடகிழக்கு.

★ சிவக்கொழுந்து நாகராசா தோப்புவீதி, மட்டுவில் கிழக்கு

★ இராசா சச்சிதானந்தன் குருநாதர் கோவிலடி வித்தகபுரம.

★ சின்னராசா சதீஸ்வரன் 45/27 முருகமூர்த்தி வீதி வண்ணார் பண்ணைமேற்கு; (உ-10,6)

# இலங்கை அரசு புலிகளுடன் பேச இந்தியாவின் அழுத்தம் வேண்டும்

## தமிழக தலைவர்கள் கூட்டாககோரிக்கை வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையின் அமைதி சமாதான முயற்சியைகுழப்பிநாட்டின் இயல்பு நிலையை சீழிக்கவே விடுதலைப்புலிகள்விமானத் தளங்கள் மீதுதாக்குதல் நடத்தினார்களென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருப்பதை தமிழ் நாட்டுத்தலைவர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

ஜனாதிபதியின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்து நேற்று முன்தினம் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பலர் ஒன்றிணைந்து கூட்டறிக்கையொன்றை விடுத்தனர்.

அவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏற்றசூழலைஉருவாக்கிபோர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

இதனை இலங்கை அரசு மேற்கொள்ள, இந்திய அரசு இலங்கையை வற்புறுத்த வேண்டுமென அவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி அறிக்கையில்; தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழநெடுமாறன், தமிழ்நாடு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் ராஜாராம், தமிழ்நாட்டு முன்னாள் அமைச்சரும் மக்கள் நலஉரிமைக்கழகசெயலாளருமான பண்டுருட்டி ராமச்சந்திரன், தந்தை பெரியார் திராவிடக் கழக தலைவர் குளத் தூர்மணி உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் மெற்றியோர், தமிழர் இயக்க பொது செயலாளர்தியாகுதமிழ் தேச பொதுஉடமைக்கட்சிபொதுச் செயலர் மணியரசன் மற்றும் தமிழ்த் தேசிய கழகத் தலைவர் சு. வீரபாண்டியன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். [இ]

## மேலை வளவு கொலை வழக்கு 17 பேருக்கு ஆயுள் தண்டனை

(சேலம்)

மதுரை மேலைவளவு கொலை வழக்கில்17பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

சேலம் மாவட்ட செசன் நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட இவ் வழக்குடன் தொடர்புடைய வேறு23பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலை வளவு அருகே பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஊராட்சி மன்றத்தலைவர்முருகேசன், ஆறுதலித் பிரிவைச் சேர்ந்த வாகள் உயர் சாதிக்காரனின் உத்தரவை மீறி பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட வந்த வேளையே இந்தப் படுகொலைகள் நிகழ்ந்தன. (து)

## பீரங்கித் தாக்குதல் கமாஸ் அமைப்பின் மூத்த உறுப்பினர் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் பீரங்கித் தாக்குதலில் பலஸ்தீன கமாஸ் அமைப்பின் அரசியல் உறுப்பினர் ஒருவர் பலியாகியுள்ளார்.

அண்மையில் ஹஸ்பேன் நகரில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் பலியானவர் தமது அமைப்பின் அரசியல் பிரிவின் மூத்த உறுப்பினர் என்று கமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. (உ-7)

## பதவிவிலக்கப்பட்ட அப்துல்ரஹ்மான் வாஹிட் அமெரிக்கா பயணம்

[ஜகார்த்தா]

இந்தோனேஷிய முன்னாள் அதிபர் அப்துல்ரஹ்மான் வாஹிட் கண் வருத்தத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

அண்மையில் அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்டும் வாசஸ் தலத்தைவிட்டு வெளியேறாதிருந்த அப்துல்ரஹ்மான் வாஹிட் அமெரிக்கா செல்ல உத்தேசித்தமை பெரியராஜ தந்திரம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தோனேஷியாவை விட்டு அமெரிக்கா செல்லும் முன் வாஹிட் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்; தான் திரும்பி வந்து நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பப் போவதாகவும் தனது வெளியேற்றம் நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான மக்கள் வழியனுப்பஅவர் அமெரிக்காவுக்குப் பயணமானார். (து)

## சீனாவில்சிறைவைக்கப்பட்ட அமெ. அறிஞர்கள்விடுதலை

(பீகிங்)

சீனாவில் உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த இரு அமெரிக்க அறிஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தாய்வானுக்காக இந்தஇருவரும் சீனாவில் வேவு பார்த்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் திருமதி. போஸ் மற்றும் சிம்கா ஆகிய இருவருக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மனிதாபிமான முறையில் இருவரையும் விடுதலை செய்வதாகச் சீனச் செய்தித்தாபனம் பின் அறிவித்தது.

ஆனால் நேர்மையாய்ப்பட்டதாலதான் விடுதலை கிடைத்ததுஎன்று சிலர் கருதுகிறார்கள்.

இருந்தபோதும் அமெரிக்க அதிபர் புஷ் சீனாவின் பெருந்தன்மையையும் மனிதாபிமானத்தன்மையையும் பாராட்டியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் சீன விஜயமும் அமைத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது; (து)

## இராணுவ உதவி

(டாக்கா)

பங்களாதேஷில் தேர்தலை நடத்த தேவைப்படின், இராணுவத்தின் உதவியை நாடப்போவதாக இடைக்கால அரசின் அதிபர் லத்திப்புரகுமான் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷிலுள்ள கட்சிகள் தேர்தல நெருங்க நெருங்க நெருக்குதல்கள் தருவதாகவு தான்பொறுப்பு ஏற்றதன் பின் ஓரளவு மாற்றங்கள செய்துகொண்டு வருவதாகவும் செய்யும் மாற்றங்கள் சரியானவை என்றும் லத்திப்புரகுமான் மேலும் தெரிவித்துள்ளார். (து)

## தே ஜ.மு இல் இணைவு

(புதுடில்லி)

பாட்டாளி மக்கள் கட்சி மீண்டும் தேசிய ஜனநாயக முன்னணியில சேர்ந்துள்ளது. கடந்த புதன்கிழமை பிரதமர் வாஜ்பாயைச சந்தித்துப் பேசியதையடுத்து முன நிபந்தனை ஏதுமின்றிச் சேர்ந்துள்ளது.

முன்பு தேசிய ஜனநாயக முன்னணியில இரண்டு அமைச்சர்களைக் கொண்டிருந்த இந்தக் கட்சி தொகுதி உடன்பாடு காரணமாக எழுந்த தகராற்றினால் விலகியமை குறிப்பிடத்தக்கது. (து)

## பிலிப்பைன்ஸில் எரிமலை

(மணிலா)

பிலிப்பைன்ஸின் 'மயோன்' எரிமலை மூன்றுவாரங்களுக்குள் இரண்டாம் முறை நெருப்பைக் கக்கியுள்ளது.

இந்த எரிமலை ஏற்கனவே குமுறியதைவிட இம் முறை மிகவும் அபாயகரமாக இருந்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிமலையில் இருந்து எழுந்த நெருப்புக் குழம்பு 6 மீற்றர் தூரம மேலெழுந்ததாகவும் அதன் சாம்பல 3 மீற்றா தூரம உயர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அதன் சுற்றாடலில் உள்ள மக்கள பாதுகாப்புத தேடி வேறு நகரங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (உ-7)

## 13 அமைச்சர்கள் தெரிவு

(காட்மண்டு)

நேபாள புதிய அமைச்சரவையில் 13 அமைச்சர்கள சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

புதிய பிரதமர் எஸ். பகுதூர் தேபா அவர்களின் பெயர்களை வெளியிட்டதுடன் 9 இலாகா இல்லாத அமைச்சுகளையும் அறிவித்துள்ளார்.

புதிய பிரதமர் நிதி வெளிநாட்டுப் பொறுப்புகளையும் தம் வசம் வைத்திருக்கிறார்.

## பாரதரத்னா விருது சிவாஜிக்கு வழங்க சிபார்சு

(சென்னை)

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு பாரத ரத்தின விருது வழங்கப்பட வேண்டும் என்று தென்னிந்திய திரைப்படச் சபை மத்திய அரசுக்கு தகவுரை செய்துள்ளது.

மேற்படிசபையின் தலைவர் கோதண்டராமையா சென்னையில் கருத்து தெரிவிக்கையில் நாட்டின் கலாசாரத்துக்குத் துணையாக நின்றசிவாஜி கணேசனுக்கு பாரதரத்தினா விருதை இந்திய அரசு கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (து)

## வாயுக்கசிவு 4 பேர் படுகாயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் பிரதான நகர் ஒன்றில் வாயுக்கசிவினால் ஏற்பட்ட விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். (உ-7)

## பூலான் தேவியை பழிவாங்க 20 வருடங்கள் காத்திருந்த பங்கஜன்

(புதுடில்லி)

பூலான் தேவியைப் பழி வாங்கும் நோக்குடன் 20 வருடங்கள் காத்திருந்ததாக கொலை குறித்து கைது செய்யப்பட்ட பங்கஜன் தெரிவித்துள்ளார்.

உயர் ஜாதியைச் சேர்ந்த பங்கஜனின் உறவினர்கள் முன்பு தன் மீது பாலியல் வல்லுறவை மேற்கொண்டதற்காக இருபதுக்கு மேற்பட்டோரை பூலான் தேவி கொலை செய்துள்ளார்.

அதற்குப் பழிவாங்கும்நோக்குடன் 20 வருடங்கள் காத்திருந்து பூலான் தேவியைக் கொலை செய்த பங்கஜன் தனது கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

மேல் விசாரணைக்காகக் பங்கஜன் இப்போது புதுடில்லிக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

இதேவேளை, பூலான் தேவியின் கணவரே பங்கஜன் கொலை செய்திருக்க மாட்டான் என்று கூறியுள்ளார். (து)

## தே.ஜ. கூட்டணியில் புதிய விதிமுறைகள் அமுல்படுத்தக் கோரிக்கை

(புதுடில்லி)

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகும் கட்சிகளுக்கும் சேரும் கட்சிகளுக்கும் சில விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் ஜனாக் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

புதுடில்லியில் நடந்த பா.ஜ.க மத்திய குழுக் கூட்டத்தில் பேசும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்; சொந்த ஆதாயத்திற்காக பாட்டாளி மக்கள் கட்சி போன்ற கட்சிகள் கூட்டணியிலிருந்து விலகினவென்றும் மீண்டும் இப்பொழுது சேர்வதற்கு வந்திருக்கின்றன வென்றும் இவற்றிற்கெல்லாம் ஒரு விதிமுறை அமைக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

## கொலைகாரரை ஏற்றிச் சென்ற கார் சாரதி கைதானார்

(புதுடில்லி)

சாம்பல் பள்ளத்தாக்கின் முன்னாள் கொள்ளைராணியும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான பூலான் தேவி படுகொலையுடன் சம்பந்தமான முக்கிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூலான் தேவியை சுட்டுக் கொன்ற முகமூடி அணிந்த மூவரும் தப்பிச் செல்ல உடந்தையாகஇருந்த இவர், நேற்று முன்தினம் உத்தராஞ்சல் மாநிலத்தில் றொக்கே என்ற இடத்தில் பொலிஸ் அதிரடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சேஸ் இன்பாஸா என்ற கார் சாரதி என பொலிஸாரின் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

இலஞ்சம்கொடுத்து இவரின் காரைப் பயன்படுத்தி கொலைகாரர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும், காருக்குள்ளேயும் இவர்கள் முகமூடி அணிந்திருந்ததால் அவர்களின் அடையாளம் தனக்கு தெரியவில்லை என சாரதி கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-7)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ எட்டுச்சக்கர சொகுசு வாகனம்

நம் நாட்டில் நாலு சக்கர வாகனங்கள் அநேகமாம் ஆனால் ஜப்பான் உற்பத்தியான எட்டுச் சக்கரங்களுடன் கூடிய மின்சார வாகனமொன்று தென்டோக்கியோவிலுள்ள கியோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹிரோஷி ஷிமிஸு என்பவரும் அவரது குழுவினராலும் உருவாக்கப்பட்டுள்ளது.

6-7 மீட்டர் நீளமும் 2. 98 தொன் நிறை உடைய இவ்வாகனம மணிக்கு 311 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது.

மீள மின்வலு (Recharge) பண்ணக் கூடிய பாற்றறி மூலம் இயங்கும் இந்த மின்சார வாகனம் சர்வதேசரீதியில் அமோக விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது;

அவதானி

இனத்தின் நன்மை ஒருவனுக்கு மனத்தின் நன்மையால் வரும் பயனை நிலைபெறச் செய்யு :
குறள்

# வலம்புரி

## பொறுப்புடன் செயற்படுக

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் சர்வ ஜன வாக்கெடுப்பு எதிர் வரும் ஆகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1978 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டு தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பு நாட்டிற்குப் பொருத்தமுடையதல்ல என்ற கருத்தை முன் வைத்து - புதிய அரசியலமைப்பின் அவசியத்தை வலியுறுத்தியே இச் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் தமது தேர்தல் பிரச்சாரங்களின் போது தாம் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனக் கூறியிருந்தன. ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணியும, ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே கருத்தையே கொண்டிருந்தன.

எனினும் ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு முன்வரவில்லை.

ஏனெனில ஜே ஆர். ஜயவர்த்தனா தயாரித்த அரசியல யாப்பில ஜனாதிபதி சர்வ வல்லமை பொருந்திய தலைவராக விளங்குகிறார். இந் நிலையில தனக்குக் கிடைக்கக்கூடிய பெரும் அதிகாரங்களையும், சுக போகங்களையும் இழப்பதற்கு சந்திரிகா அம்மையார் தயாரில்லை இதே இடத்தில் ரணில் இருந்தாலும் இதனையே செய்திருப்பார்.

இப்போது ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா முன் வந்துள்ள போதிலும், அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஏனெனில் அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி மாளிகையில் அடுத்த முறை சந்திரிகா அம்மையார் குடியிருக்க முடியாது. இந் நிலையில ரணிலுக்கும் ஜனாதிபதி மாளிகையில் குடியிருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அதனையேன் விட்டு விலகுவான் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

எதுவாயினும் புதிய அரசியலமைப்பு தமிழர்களுக்கு விடிவைத் தருமா என்பதை ஆய்வு செய்து அதனை மக்களுக்கு வெளிப்படுத்தும் பெரும் பொறுப்பு தமிழ்க் கட்சிகளுக்கு உண்டு.

---

### பரமபிதா காட்டிய பாதை

# அன்னாளின் பாதங்களில் பணிந்து போற்றி அருள் வரங்கள் பல பெற்று உய்ந்திடுவோம்



''கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்''.

ஆம்! இறைவனவன் பதம் நாடும் யாரும் கைவிடப்படுவதில்லை. அவர்களுக்கு கேட்டவை கொடுக்கப்படுகின்றன, தேடியவை கிடைக்கப் பெறுகின்றன, தட்டியவை திறக்கப்படுகின்றன.

இறைவன் நம் மீது அளவு கடந்த அன்புவைத்துள்ளான் என்பதில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

### அன்னாளின் வாழ்வு

பரிசுத்த அன்னாள அன்னையருக்கெல்லாம் அன்னையாக அருள வரங்களைப் பொழிந்து காத்துவருகிறாள்.

அன்னாள இயேசுக்கிறிஸ்துவின் பேத்தி. அதாவது பரிசுத்த கன்னிமரியாளின் அன்னை, இறை மகனின் தாய்க்குத் தாய், எனும் உயர்ந்த உன்னத பேறும் பாக்கியமும் பெற்றவள்.

யுவக்கீன அன்னம்மாள் தம்பதியினருக்கு நீண்ட காலமாகவே பிள்ளைப் பேறில்லை. இதனால் அவர்கள் பெரும் வேதனையடைந்திருந்தார்கள.

ஆனால். அவர்கள் ஆதி இறைவனை மறந்து விடவில்லை தொடர்ந்து அவன் அருளைக் கேட்டார்கள். அவன் கிருபையைத் தேடினார்கள். இறைவனின் இரக்கத்தைத்தமது செபங்களினாலும், நடத்தையினாலும், வாழ்க்கை முறையினாலும தட்டிக்கொண்டேயிருந்தனர்.

### மரியாளின் பிறப்பு

யுவக்கீன் - அன்னாள் தம்பதிகளின் தளராத வேண்டுதல இறை அருளை அவர்கள பெற்றுக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்தது.

உலகிலே பிறக்கும் மனிதர்கள செனம பாவமெனும் ஆதிப் பெற்றோர் வழியால் வந்த பாவத்துடனேயே பிறக்கின்றார்கள். ஆனால் பரிசுத்த அன்னாள் என்ற கன்னி மரியாள் சென்மபாவமின்றி உற்பவித்த கன்னிகை, உலகின் மீட்பரின் தாய்.

அவ்வாறான சென்மபாவமில்லாத தேவனின் தாயை இவ் உலகிற்கு ஈந்த பாக்கியம் புனித அன்னாளுக்கு மட்டுமே இறை அருளால் கிடைத்தது. இதனால் அவள் எம் அன்னையருக்கெல்லம் அன்னையானாள்.

### சீரிய நெறியில் வளர்ப்பு

தேவ அழைத்தலுக்கு ஏற்ற விதத்தில் அன்னாள தனது ஒரே மகளைக் கண்ணும் கருத்துமாய்ப்பேணிப்வளர்த்தாள்.

இறை வார்த்தைகளை தன் மகளுக்குப் போதித்து சிறந்த சீரிய வாழ்வு முறைகளைக் கடைப்பிடிக்க வைத்து இறைவனுக்கும் அவரது அழைத்தலுக்கும் ஏற்றபடி வளர்த்து வந்தாள்.

துன்பத்தில் துயர்துடைப்பவளாகவும, இன்பத்தை பகிர்ந்து கொளபவளாகவும், இடர்களைக் கடக்கும் வழி சொல்லித் தருபவளாகவும் இருந்து நல்ல தாயாக வாழ்ந்து காட்டினாள்.

### எமக்குத் தரும் படிப்பினை

பரிசுத்த அன்னாள இறைவனில் நம்பிக்கை வைத்து தனது வேண்டுதல்களைத் தொடர்ந்து சமர்ப்பித்தாள். அதில் வெற்றியும் கண்டு மனுக்குல மீட்பரின் தாயை எமக்குப் பெற்றுக்கொடுத்தாள்.

அதேபோல் நாமும் இறை விசுவாசம், நம்பிக்கையில் என்றும் தளர்ந்து போகக் கூடாது இறைவனின் அருட்கதவைஎமதுசெப, தப, வாழ்வினால் தொடர்ந்து தட்டிக் கொண்டிருக்கவேண்டும். அப்போது இறைவன் நிச்சயம் எமக்கும் அருள் பாலிப்பார்.

மத வாதிகளாக மதம் பிடித்திருக்காது, மனிதனில் இறைவனைக் காணத்துடிக்க வேண்டும். இவன் சைவன் என்றோ, இவன் கிறிஸ்தவனென்றோ, இவன் இஸ்லாம் என்றோ, இவன் பௌத்தனென்றோ, வேற்றுமையில் இறைவனைத் தேடாது. எல்லோரும் இறைவன் படைத்த மனிதர்களே என நினைந்து மனிதனில் இறைவனைக் காண வேண்டும்.

அதற்காக நெஞ்சத் தூய்மையும், நேர்மையும் கொண்டு வாழவேண்டும்; எனக்கு-அருள்தா இறைவா என வேண்டாது, எமது அயலவனுக்காக இறைவனின் அருட்கதவைத் தட்டுவோம். நிச்சயமாக இறையருள் எங்களுக்காகத் திறக்கப்படும்.

### குடும்பத்திற்கு எடுத்துக்காட்டு

புனித அன்னாள் தனது குடும்பத்தில் வாழ்ந்து காட்டிய வாழ்வைப்போல் நாமும் எமது குடும்பங்களில் நல்லறம் சிறந்தோங்க வாழவேண்டும்.

குடும்பத்தில் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்கவேண்டும்; பாதுகாக்கவேண்டும் என்பதை புனித அன்னாளின் எடுத்துக்காட்டைக் கொண்டு அறிந்துகொள்வோம்.

அதேபோல் பிள்ளைகள் ஒவ்வொருவரும் எவ்வாறு பெற்றோருக்கு கீழ்ப்படிந்து சிறந்த ஒழுக்கத்துடன் சீரிய வாழ்வு வாழவேண்டும் என்றும் புனித அன்னாளின் குடும்ப வாழ்வு எமக்குக்காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பாண்டியன்தாழ்விலும், மானிப்பாயிலும், வலித்தூண்டலிலும் புனித அன்னாளுக்கான சிறப்பு பெற்ற ஆலயங்கள் அமைந்துள்ளன.

இவற்றில் புனித அன்னாளின் பெருவிழாக்கள் கொண்டாடப்பட்டு குடும்ப வாழ்வின் மகத்துவம் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

இறை மகனின் தாயை ஈன்றளித்த இந்தத் தாயை 'சந்தானமாதா' எனவும் பெயரிட்டு அழைத்துப் பூஜிப்பதில் பக்தர்கள் பேருவகை கொள்கின்றனர்.

அன்னாள் பாதந்தனைப் பணிந்து அருள் வரங்கள் பல பெற்று உய்வோம் இப் புவி தனிலே-ஆமேன். □

**ஆ. ஜென்சன் றொனால்ட்**
(ஈச்சமோட்டை)

---

## முக்கிய கூட்டம்

(கோப்பாய்)

வலி கிழக்குப் பிரதேச செயலரின சிபார்சின் பேரில் கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் புதிய விழிப்புக் குழு ஒன்றை அமைப்பதற்கான கூட்டம இன்று மு. ப 10. 30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவகலூரியில நடைபெறவுளளது.

இக் கூட்டத்தில் அப்பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்களினதும் ஏனைய பொது அமைப்புக்களினதும் முக்கிய உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொளளும்படி கோப்பாய் மத்தி கிராமசேவையாளர் கு. யோசப் ரட்ணராஜா அறிவித்துள்ளார். (உ-79)

---

## ஆலய உட்பிரகாரத்தில் பணப்பை அபேஸ்

(யாழ்ப்பாணம்)

நல்லைக்குமரன் உற்சவ ஆரம்பநாளான கடந்த புதன் கிழமை ஆலய உட்பிரகார வீதியில் வைத்து கரவெட்டியைச் சேர்ந்த அடியார் ஒருவரின் பணப்பை ஒரு தொகைப் பணத்துடன் அபேஸ் செய்யப்பட்டுள்ளது

கற்பூரம் விற்கும் சிறுவர்களே இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், பொது மக்களை அவதானமாக இருக்கும் படியும் தொண்டர் அமைப்புகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளன. (உ-104)

---

## பலியான படையினரின் வீடுகளுக்குச் சென்று அமைச்சர் அனுதாபம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மற்றும் விமானநிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது கொல்லப்பட்ட படையினரின் வீடுகளுக்கு தனித்தனியே சென்று அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே அனுதாபம் தெரிவித்துள்ளார்.

பலியான படையினருக்காக அரசு ஆரம்பித்துள்ள நலன்புரி நிவாரணத்திட்டத்திற்கமைய அவர்களின் குடும்பங்களுக்கு ரூபா 20 ஆயிரம் வீதம் வழங்கிய அமைச்சர் குடும்ப உறுப்பினர்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கள அரசால் பெற்றுத் தரப்படும் என்று உறுதியளித்துள்ளார். (8)

---

## ஜனாதிபதியின் அணுகுமுறை நடைமுறைச் சாத்தியமற்றது சந்திரசேகரன் சாடல்

[கொழும்பு]

பாராளுமன்றத்தைக் கூட்டாமல அரசியலகட்சிகளுடன் பேசிக் கொண்டிருப்பது நடைமுறைக்குப் பொருந்தாத விடயமென்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பீ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ள இந் நேரத்தில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவது பற்றி கலந்துரையாட தாம் தயாரில்லை என்றும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் அக்கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [உ-5]

---

### தினசரி தியானம்

## ஞான தீபம்

தேஜோமயானந்தமே, யாண்டும் ஒளி வீசும் ஞான விளக்கை என் உளளத்தினுளளே ஏற்றி வைப்பாயாக.

விவேகமே வடிவெடுத்தது ஞானதீபம். பக்தியினின்று பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவரத் தியானம் அது எரிவதற்கு ஏற்ற நல்ல காற்றாகிறது இடையறாப் பிரம்மச் சரியத்தினின்று வரும் பேருணர்வு அந்தத்தீபத்திற்குத் திரியாகிறது. பற்றற்ற உளளம அந்த விளக்கை வைப்பதற்கேற்ற இடமாகிறது. அங்கு ஆசையென்னும் புயல்காற்றடிக்காதிருக்க வேண்டும. ஈசுவரசொரூபம் அத்தீபத்தில் எரியும் ஒளிப பிழம்பாகிறது.

விளக்கைப்பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலுமாமே

திருமந்திரம்
ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# விமானத்தளதாக்குதல் விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வ தேச விமான நிலையம் மீது விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத் துறை மற்றும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக இதுவரை விமானப் படையைச் சேர்ந்த மூன்று பேர் விமானப்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

விமானப் படைத் தளத்திற்குள் விடுதலைப் புலிகளால் எவ்வாறு ஊடுருவ முடிந்தது என்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுத்துறையினரும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரும் தனித் தனியாக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ந)

## யாழ். நகரை . . .

யாழ் நகரைவிட்டு மக்கள் வெளியே செல்லவும், யாழ் நகருக்குள் நுழையவும் முடியாதவாறு முக்கிய சந்திகள் தோறும் இராணுவத்தினரும் பொலிஸாரும் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

திருநெல்வேலிச் சந்தியில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டு வீதியில் போவோர் வருவோர் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

சுற்றிவளைப்புப் பகுதிகளில் வீடுவீடாகச் சென்ற இராணுவத்தினர் வீடுகளில் உள்ள குடும்பப்பதிவு அட்டைகளை (படத்துடன்கூடியது) மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தனர்.

இச்சுற்றிவளைப்பின் காரணமாக யாழ்நகரில் சன நடமாட்டம் குறிப்பிடக் கூடிய அளவில் இருக்கவில்லை.

வீடுவீடாகச் சோதனைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் துண்டுப்பிரசுரம் ஒன்றையும் விநியோகித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் சந்தியில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் படையதிகாரிகள் தங்கியிருந்து சுற்றிவளைப்புக்கான அறிவுறுத்தல்களை வழங்கிக்கொண்டிருந்தனர், அப்பகுதியில் இராணுவ வாகனங்கள் அம்புலன்ஸ் வண்டி என்பனவும் நிறுத்தப்பட்டிருந்தன.

இச்சுற்றிவளைப்பும் தேடுதலும் நண்பகல் 12 30 மணி வரை இடம்பெற்றது (வ)

## அவசரகால . . .

அவர் மேலும் தெரிவிக்கையில் பிரிவினையில் இருந்தும் பயங்கரவாதத்தில் இருந்தும் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமாயின் மக்களனைவரும் ஓகஸ்ட் 21ம் திகதி நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பில் ஆசிற்கு சாதகமாக வாக்களிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(ந-4)

## ஜனாதிபதியின் . . .

களின தலைமைப் பீடத்தில் உள்ளவர்களின் நடத்தையில் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கு வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1 986)

உ

அளவெட்டி

கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி

**பிள்ளையார் ஆலய**

**மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001**

கொடியேற்றம்: 25-07-2001 புதன்கிழமை

சப்பறத்திருவிழா: 01-08-2001 புதன்கிழமை மாலை 6 மணி

தேர்த்திருவிழா: 02-08-2001 வியாழக்கிழமை காலை 10 மணி

தீர்த்தத்திருவிழா: 03-08-2001 வெளிக்கிழமை காலை 10 மணி

பெரியபுராணம் என்ற தலைப்பில்

திரு. செ. இராஜநலேந்திரன்

(உப அதிபர், மகாஜனாக்கல்லூரி

அவர்களால் தொடர்சொற்பொழிவு நடைபெறுகிறது

தேர்த்திருவிழாவன்று

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

திரு ஆறுதிருமுருகன் அவர்களால்

விசேட சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

ஆலய மஹோற்சவ குரு:

'தற்புருஷ சிவாச்சாரியார்'

பிரம்மஸ்ரீ சிவ ஸ்ரீ கோபாலக் குருக்கள்

(அராலி வண்ணபுரம்)

ஆலய அர்ச்சகர்: சிவ இராஜேந்திர சர்மா

ஆலய நிர்வாக சபையினர்

(3409)

# என். கே. கணேசன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஆவரைநகர் ஈழத்துச்சிதம்பர ஆஸ்தான வித்துவானும், புகழ்பூத்த நாதஸ்வர மேதையுமான என். கே. கணேசன் நேற்றுக் காலமானார்.

நாதஸ்வரத்தில் தனக்கென தனியான இடத்தை வகித்த கணேசனின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்.

(ந)

# வன்னிக்கு உணவு

[வவுனியா]

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு கடந்த ஒருவார காலத்திற்குள் 66 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களும், 20 லொறிகளில் உரவகைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

[வ)

## பிரான்ஸ் ..

லங்கா விமான சேவையின் சிரேஸ்ட நிர்வாக அதிகாரி பீட்டர் ஹில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் தெரிவிக்கையில்;

விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திய 48 மணி நேரத்திற்குள் விமான நிலையம் செயற்பட முடியும் என அறிவித்திருந்தமையை அடுத்து பயணிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

சேதமடைந்த விமானங்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால், அதனைப் பெறவும் தாம் நடவடிக்கையெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (வ)

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

இன்று முதல்

அஜித் (மாறுபட்ட 7 வேடங்களில்)

வசுந்தராதாஸ், மீனா, நடித்த

**சிட்டிசன்**

[ரீல்ஸ்]

தினசரி 11-00, 2-30

(பு-நே)

(3408)

# 200 செலூலர் பறிமுதல்

கட்டுநாயக்காவிமானநிலையத்தில் இலங்கை இந்தியப் பெண்களிடமிருந்து 200 செலூலர் தொலைபேசிகளும் 2 கிலோ எடையுள்ளதங்கமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்க அதிகாரியின் வழமையான சோதனை நடவடிக்கைகளின் போதே இவை கைப்பற்றப்பட்டதாகவும் இவ்விரு பெண்களும் தீவிர புலன்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# யுவதியை காணோம்

வவுனியா மதீனா நகரைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராஜசிங்கம் தயாளினி என்ற யுவதியே கடந்த 20 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளதாக பெற்றோரால் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5

## சட்டப்படியே---

பர் சிறிசேனஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த 19ம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது பொலிஸார் சட்டப்படியே நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

ஆனால் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சட்டத்தைமீறி நாட்டின் அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் நடந்து கொள்ள முற்பட்ட போதே பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார் (வ)

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள EN சேம்பிறிச் கார் (கறுப்பு)

சாளி மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**நிரஞ்சன் பல் பொருள் வாணிபம்**

பஸ் நிலையம்,

அச்சுவேலி.

(கி-2332)

# விமானங்கள் தரையிறங்கத்தடை

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் தனியார் விமானங்களும், எரிபொருள் நிரப்பும்நோக்குடன் வரும் வெளிநாட்டு விமானங்களும் தரையிறங்குவதற்கு கடந்த வியாழன் முதல்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், மற்றும்விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே இத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

(வ)

# தொடர்ந்து விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

அல்லாரையில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் அ. பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆஜர் செய்யப்பட்ட மூவரையும் அடுத்த மாதம் 10ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் அ. பிரேமசங்கர் உத்தரவிட்டார்

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக உயர்இராணுவ அதிகாரிகளின் பணிப்பின் பேரில் இராணுவப் பொலிஸாரும் விசேட புலன் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

(வ-52)

# கண்டன அறிக்கை

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதும் விமானப் படைத்தளம் மீதும்விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை சார்பாக அதன் செயலாளர் கோபி அனான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள்பயங்கரவாதத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் எனவும் நோர்வேநாட்டினால்முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு தாம் பூரண ஆதரவுவழங்குவதாகவும் அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

**கண்ணீர் அஞ்சலி**



எமது நிர்வாக இயக்குநர்

திரு. ந. ஜெயபாலசிங்கம் அவர்களின்

அன்புச்சகோதரன்

**நடராஜா ஞானபாலசிங்கம்**

அவர்கள் 28-07-2001 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகப் பணியாளர்களும,
மாணவர்களும்.

**Jaffna Technical Institute**

200/1, Stanley Road. Jaffna.

(கி/2333)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001,ம் ஆண்டு யூலை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.